டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 19.08.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 050 - Madurai | Online Edition

# செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூரில் கனமழை வாய்ப்பு!

சென்னை, ஆக.18

தமிழகத்தில் கடலூர், செங்கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட 3 மாவட்டங்களில் இன்று (ஆக.19) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

திருவள்ளூர், சென்னை, திருவண்ணாமலை, பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, திண்டுக்கல், தேனி, சேலம், ஈரோடு, நாமக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தின் இதர பகுதிகளில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

ஆக.20 முதல் 22-ம் தேதி வரை தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழையும், 23, 24ஆம் தேதிகளில் வட கடலோர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று (ஆக.19) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

# பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சியில் விவசாயிகள் பங்கேற்பு



சேலம், ஆக.18

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம் வெள்ளையூர் கிராமத்தில், அட்மா திட்டத்தின் கீழ் பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பயிற்சி நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் தலைமை தாங்கினார். பயிற்சியில் வேளாண்மை அலுவலர் ஜானகி, விவசாய அடையாள அட்டை பதிவு செய்வதன் அவசியத்தையும், வறட்சியில் பயிர்களைக் காக்க பிபிஎஃப்எம் (ஊணஊணய்னி) திரவத்தைப் பயன்படுத்துவது குறித்தும் மற்றும் பயிர் காப்பீடு செய்தலின் முக்கியத்துவம் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினார். பயிற்சியாளர் பிரவீன், பருத்தியில் நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள், நுண்ணூட்டச் சத்துக்களின் அவசியம், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளின் முக்கியத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து எடுத்துரைத்தார். தொடர்ந்து, உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல், அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து விவசாயிகளுக்கு நேரடிச் செயல்முறை விளக்கம் அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் சந்தோஷ், வேளாண் விரிவாக்க மையத்தில் நிலக்கடலை, ஆமணக்கு, துவரை மற்றும் நெல் விதைகள் இருப்பு இருப்பது குறித்தும், துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விவரித்தார்.

மேலும், உதவி வேளாண்மை அலுவலர் ரவிகுமார், ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்தும், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி, மண் மாதிரி எடுப்பதன் அவசியம் குறித்தும் விளக்கிப் பேசினர். நிறைவாக, உதவி தொழில்நுட்ப மேலாளர் ரமேஷ், அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்து நன்றி கூறினார். இப்பயிற்சியில் அப்பகுதியைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# கால்நடை தீவனத்திற்கான பசுந்தீவன உற்பத்தி – இலவச ஒரு நாள் பயிற்சி

கரூர், ஆக.18

கரூர் மாவட்டம், மண்மங்கலம் அருகே பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், கால்நடை தீவனத்திற் கான பசுந்தீவன உற்பத்தி குறித்த ஒரு நாள் இலவச உள்வளாகப் பயிற்சி 19.08.26 (புதன்கிழமை) அன்று நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் விவசாயிகள், கால்நடைப் பண்ணையாளர்கள், சுயதொழில் தொடங்க விரும்பும் இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

**பயிற்சியில் இடம் பெறும் முக்கிய தலைப்புகள்**

கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனத்தின் முக்கியத் துவம், பசுந்தீவனப் பயிர்களின் வகைகள் மற்றும் சிறந்த ரகங்கள், பசுந்தீவனப் பயிர்களுக்கான நிலத் தேர்வு மற்றும் நிலம் தயாரித் தல், பசுந்தீவனப் பயிர்களை விதைத்தல் மற்றும் நடவு முறைகள், பாசனம், உரமிடுதல் மற்றும் பராமரிப்பு முறைகள், ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் கிடைக்கச் செய்வதற்கான திட்டமிடல், பல்வேறு கால்நடைகளுக்கேற்ற பசுந்தீவனத் தேர்வு மற்றும் தீவன மேலாண்மை, பசுந்தீவனத்தை அறுவடை செய்தல், சேமித்தல் மற்றும் பயன்படுத்துதல், பசுந்தீவன உற்பத்தியில் ஏற்படும் பொதுவான பிரச்சினைகள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள்.

**பசுந்தீவன உற்பத்தியின் பொருளாதாரப் பயன்கள்**

இத்தலைப்புகளில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் வல்லுநர்களால் பயிற்சி மற்றும் செயல்விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் நேரிலோ அல்லது அலுவலகத் தொலைபேசி எண் 04324-294335 / அலைபேசி மற்றும் வாட்ஸ்அப் எண் 73390 57073 ஆகியவற்றில் தொடர்பு கொண்டு, 19.08.26 (புதன்கிழமை) காலை 10.30 மணிக்குள் பயிற்சி மைய வளாகத்திற்கு வருகை தந்து, இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**16. பாசிப்பருப்பு சூப்**

**தேவையான பொருட்கள்**

பாசிப்பருப்பு — ½ கப்

பூண்டு — 3 பல்

மிளகு – சிறிதளவு

சீரகம் – சிறிதளவு

உப்பு – தேவையான அளவு

**செய்முறை**

பருப்பை வேக வைத்து மசித்து தாளித்து கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# தென்னை மரத்தில் சிவப்பு கூம்பு வண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்த வேர் ஊட்டல்



மதுரை, ஆக.18

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் B.Sc. (Hons.) வேளாண்மை இறுதியாண்டு பயிலும் மாணவிகள் தாரணி லோகநாதன், தர்ஷினி, கிருஷ்ண பிரியா, கல்கி, அமிர்த கார்த்திகா மற்றும் லாவண்யா ஆகியோர், RAWE - (Rural Agricultural Work Experience கிராமப்புற வேளாண் பணி அனுபவம்) திட்டத்தின் ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம் அழகாபுரி கிராமத்தில் தென்னை மரத்தில் காணப்படும் சிவப்பு கூம்பு வண்டு (Red Palm Weevil) தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான வேர் ஊட்டல் முறையைப் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் செயல்விளக்கம் அளித்தனர்.

**சிவப்பு கூம்பு வண்டு – முக்கியத்துவம்**

தென்னை மற்றும் பிற பனை வகை மரங்களில் சிவப்பு கூம்பு வண்டு (Rhynchophorus ferrugineus) முக்கியமான துளைப்பான் பூச்சியாகும். இப்பூச்சியின் புழுக்கள் மரத்தின் தண்டு மற்றும் வளர்ச்சிப் பகுதிகளுக்குள் சென்று சேதத்தை ஏற்படுத்துவதால், இளம் மட்டைகள் வாடுதல், இலைகள் சாய்தல் மற்றும் மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்படுதல் போன்ற அறிகுறிகள் தென்படலாம். தாக்குதல் தீவிரமடைந்தால் மரத்தின் உயிருக்கும் பாதிப்பு ஏற்படக்கூடும்.

**விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட செயல்விளக்கம்**

சிவப்பு கூம்பு வண்டின் தாக்குதலைத் தடுப்பதிலும் ஆரம்ப நிலையில் கட்டுப்படுத்துவதிலும் வேர் ஊட்டல் (Root Feeding) முறையின் அடிப்படைகள் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டன. இம்முறையில், மரத்தின் அடிப்பகுதியிலிருந்து சிறிது தொலைவில் உள்ள ஆரோக்கியமான, சுறுசுறுப்பான வேரைத் தேர்ந்தெடுத்து, வேர் வழியாக தாவரத்திற்குள் சென்று செயல்படும் பூச்சிக்கொல்லி கரைசலைச் செலுத்தும் கொள்கை விளக்கப்பட்டது.

இந்த செயல்விளக்கத்தில் Profenofos 50% EC பயன்படுத்தப் பட்டது. வேர் தேர்வு, வேர் முனையைத் தயாரித்தல், கரைசலை வேர் மூலம் எடுத்துக்கொள்ளச் செய்தல் மற்றும் பையை பாதுகாப்பாகக் கட்டுதல் போன்ற செயல்முறைகள் விவசாயிகளுக்கு நேரடியாகக் காண்பிக்கப்பட்டன. பூச்சிக்கொல்லியின் அளவு, பயன்படுத்தும் முறை மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் எப்போதும் தற்போதைய வேளாண்மைத் துறை பரிந்துரை மற்றும் தயாரிப்பு லேபிளின்படி மட்டுமே பின்பற்றப்பட வேண்டும் என வலியுறுத்தப் பட்டது.

**விவசாயிகளுக்கு வலியுறுத்தப்பட்ட ஒருங்கிணைந்த மேலாண்மை**

வேர் ஊட்டல் மட்டும் போதுமான கட்டுப்பாட்டு முறையாகக் கருதாமல், சிவப்பு கூம்பு வண்டு தாக்குதலை ஆரம்பத்திலேயே கண்டறிதல், மரத்தைத் தொடர்ந்து கண்காணித்தல், காயங்கள் ஏற்படாமல் பாதுகாத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளை உரிய முறையில் நிர்வகித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவமும் விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும், தென்னை மரத்தில் வெள்ளை ஈ, செதில் பூச்சி, அசுவினி, மாவுப்பூச்சி, திரிப்ஸ் போன்ற இலைச் சாறு உறிஞ்சும் பூச்சிகளும், இலைப்புழுக்கள் மற்றும் இலை சுருட்டுப்புழுக்கள் போன்ற இலைகளைத் தாக்கும் பூச்சி களும் காணப்படலாம் என்பதும் பட விளக்கத்தின் மூலம் எடுத்துக் கூறப்பட்டது.

**பாதுகாப்பு முக்கியம்**

பூச்சிக்கொல்லிகளைக் கையாளும்போது உரிய தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் (PPE) பயன்படுத்துதல், தோல் மற்றும் கண்களுடன் தொடர்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுதல், குழந்தைகள் மற்றும் கால்நடைகளுக்கு எட்டாதவாறு வைத் திருத்தல் மற்றும் காலி கொள்கலன்களை முறையாக அகற்றுதல் ஆகிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**பயிற்சியின் பயன்**

இந்த செயல்விளக்கத்தின் மூலம், விவசாயிகள் சிவப்பு கூம்பு வண்டின் தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, வேர் ஊட்டல் முறையின் அடிப்படைக் கொள்கை, சரியான பூச்சி மேலாண்மை மற்றும் பாதுகாப்பான பூச்சிக்கொல்லி பயன்பாடு குறித்து நடைமுறை அறிவைப் பெற்றனர். RAWE திட்டத்தின் வாயிலாக மாணவர்கள் பெற்ற அறிவை விவசாயிகளுடன் பகிர்ந்து, தென்னை சாகுபடியில் பூச்சி மேலாண்மை குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்தினர்.

# நவீன வேளாண்மையில் பீஜாமிர்தம், ஜீவமிர்தம், கனஜீவாமிர்தம் தயாரிக்கும் முறை

இயற்கை வேளாண்மையில் பீஜாமிர்தமானது விதை நேர்த்தி செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது.

**தயாரிக்க தேவையான பொருட்கள்**

- தண்ணீர் (20 லிட்டர்)
- மாட்டுச் சாணம் (5 கிலோ)
- மாட்டு கோமியம்




- சுண்ணாம்பு (50 கிராமம்)
- கைப்பிடி அளவு வளமான மண்

**தயாரிக்கும் முறை**

பசுஞ்சாணத்தை (5 கிலோ) ஒரு காடா துணியில் எடுத்து, சிறிய கயிறால் கட்டி, 20 லிட்டர் தண்ணீரில் ஒரு இரவு (12 மணிநேரம்) மூழ்கியிருக்குமாறு தொங்கிவிடவும், மற்றொரு கொள்கலனில் 50 கிராம் சுண்ணாம்பை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு வைக்கவும் மறுநாள் காலை பசுவின் சாணத்தை தண்ணீரில் கசக்கி பிழிந்து ஒரு கைப்பிடி மண் சேர்த்து நன்கு கிளறவும். இதனுடன் 10 லிட்டர் பசுவின் கோமியம் மற்றும் ஊறவைத்த சுண்ணாம்பு தண்ணீர் சேர்த்து நன்கு கிளறவும்.

**பயன்பாடு**

- எந்தவொரு பயிரின் விதைகளையும் பீஜாமிர்தத்தை சேர்த்து ஊறவைத்த பிறகு நிழலில் உலர்த்தி விதைப்பதற்கு பயன் படுத்தவும்.

- பயிறு வகை விதைகளுக்கு, விதைகளை ஐந்து நிமிடங்கள் ஊறவைத்த பிறகு நிழலில் உலர்த்தி விதைப்பதற்கு பயன் படுத்தவும்.

- நடவு செய்யும்போது நாற்றுகள் / விதை கரணைகளை பீஜாம்ருத கரைசலில் ஐந்து நிமிடங்கள் நனைத்து பின்னர் நடவு செய்யலாம்.

- இது தீங்கு விளைவிக்கும் பூஞ்சை பாக்டீரியா மற்றும் மண்ணின் மூலம் பரவும் நோய்க் கிருமிகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கிறது.

- இதில் உள்ள பயிர் வளர்ச்சி ஊக்கிகள் விதைகள் நாற்று களுக்கு நோய் தாக்குதலிருந்து பாதுகாப்பை அளிக்கின்றன.

- இந்த பிஜாமிர்தத்தை தயாரித்தவுடன் பயன்படுத்த வேண்டும். தேவைப்படும் பொழுது இதை புதிதாக தயார் செய்து கொள்ள வேண்டும்.

**ஜீவாமிர்தம்**

ஜீவாமிர்தம் என்பது ஒரு மண்ணை ஜீவன் உள்ளதாக மாற்றும் கலவை ஆகும். இதை மண்ணில் இடும்பொழுது மண் வளத்தைப் பெருக்கி பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

### தயாரிக்க தேவையான பொருட்கள்

- தண்ணீர் (200 லிட்டர்)
- மாட்டுச் சாணம் (10 கிலோ)
- மாட்டு கோமியம் (10 லிட்டர்)
- வெல்லம் (2 கிலோ)
- பயறு மாவு (2 கிலோ)
- கைப்பிடி அளவு வளமான மண்

### தயாரிக்கும் முறை

- ஒரு தொட்டியில் 200 லிட்டர் தண்ணீர் எடுத்துக் கொள்ளவும், அதில் ஒன்றன் பின் ஒன்றாக கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை சேர்க்கவும். அதில் முதலாவதாக மாட்டுச் சாணம் பின்னர் வெல்லம், பயறு மாவு கோமியம் மற்றும் கைப்பிடி அளவு மண் ஆகியவற்றை சேர்க்கவும்.

- இவற்றை சேர்த்த பின்னர் கடிகார சுழற்சி முறையில் நன்றாக கலக்கி விடவும்

- சாக்கு பையால் அந்த தொட்டியின் மேற்பகுதியினை மூடி வைக்க வேண்டும்

- இந்த கலவையை 3 நாட்களுக்கு நொதிக்க வைக்க வேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு முறை இந்த முறையை நன்றாக கலந்து விடவும்.

- அதன் பிறகு 7 நாட்களில் இதை உபயோகப்படுத்தி விட வேண்டும். இந்த ஜீவாமரித்தத்தை அனைத்து வகையான பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 600 லிட்டர் என்ற அளவில் பாசனநீருடன் கலந்து உபயோகிக்கலாம்.

- சொட்டு நீர் பாசனத்தின் மூலமும் இதை உபயோக்கப் படுத்தலாம்




● இந்த ஜீவாமிர்தத்தை 15 நாட்கள் இடைவெளியில் மண்ணிற்கு அளிப்பதன் மூலம் மண்வளத்தை மேம்படுத்தலாம்.

**கனஜீவாமிர்தம்**

**தயாரிக்க தேவையான பொருட்கள்**

● மாட்டுச் சாணம் (50 கிலோ)

● மாட்டு கோமியம் (10 லிட்டர்)

● வெல்லம் (2 கிலோ)

● பயறு மாவு (2 கிலோ)

● கைப்பிடி அளவு வளமான மண்

**தயாரிக்கும் முறை**

கனஜீவாமிர்தத்தை தயாரிப்பதற்கு முதலில் பசுஞ்சாணம் மாட்டு கோமியம் பயறு மாவு வெல்லம் மற்றும் ஒரு கைப்பிடி அளவு வளமான மண் ஆகியவற்றை நன்றாக கலந்து கொள்ள வேண்டும். கலக்கும்பொழுது கட்டிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பிறகு சிறிய சிறிய உருண்டைகளாக அவற்றைத் தட்டி நிழலில் உலர்த்த வேண்டும். உலர்ந்த பிறகு இந்த கலவையை ஆறு மாத காலம் வரை சேமித்து வைத்துக்கொள்ளலாம்.

தகவல் : **T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# கொடிவகை காய்கறிகளுக்கு நிரந்தர பந்தல் அமைக்க மானியம் - தெரியுமா?



புடல், பாகல், பீர்க்கு, சுரை, அவரை, கோவைக்காய் போன்ற கொடிவகை காய்கறிகளின் சாகுபடி பரப்பை ஊக்குவிக்கும் வகையில், பிரதம மந்திரி ராஷ்ட்ரீய கிரிஷி விகாஸ் யோஜனா ' என்ற திட்டத்தின் கீழ் நிரந்தர கல்தூண் பந்தல் அமைக்க 50% மானியம் வழங்கப்படுகிறது.

**நிரந்தர கல் பந்தல் அமைப்பதால் ஏற்படும் நன்மைகள்?**

1) நீண்ட காலம் உழைக்கும்

2) காய்கள் தரையில் படராததால் அழுகுவது இல்லை

3) காய்கள் நேராகவும் நல்ல நிறத்துடன் சந்தை மதிப்போடு இருக்கும்

4) பறிப்பது எளிது

5) கூலியாட்கள் குறைவு

6) காற்றோட்ட வசதி இருப்பதால் பூச்சி தாக்குதல் குறைவு.

**மானிய விபரங்கள்?**

இத்திட்டத்தின் கீழ் 1 ஹெக்டேருக்கு 6 லட்சம் ரூபாய் திட்ட மதிப்பீடு செய்து அதில் 50% மானியமாக அதிகபட்சமாக ரூபாய் 3 லட்சம் வழங்கப்படும். ஒரு விவசாயி அதிகபட்சமாக ஒரு ஏக்கர் பரப்பளவுக்கு மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெற முடியும். ஏற்கனவே இத்திட்டத்தில் பயன் பெற்ற விவசாயிகள் மீண்டும் பயன்பெற முடியாது. இத்திட்டத்தின்கீழ் அமைக்கப் படும் பந்தல் களை சம்மந்தப்பட்ட தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்து 'கிரிஷி மேப்பர் ' என்ற செயலில் புவிகுறியிட்டுடன் பதிவேற்றம் செய்த பின்னரே மானியம்

(SUBSIDY) விவசாயிகளின் வங்கி கணக்கில் விடுவிக்கப்படும். மேலும் நுண்ணீர் பாசன அமைப்புடன் இணைத்து இத்திட்டத்தை செயல்படுத்தினால் அதிகபட்சமாக பயன் பெறலாம்.

**மானியம் பெற என்னென்ன ஆவணங்கள் தேவை?**

மானியம் பெற விரும்பும் விவசாயிகள் சிட்டா, அடங்கல் ரேசன் கார்டு, ஆதார் அட்டை நகல் சிறு, குறு விவசாயி களுக்கான சான்று, புகைபடம் வங்கி கணக்கு புத்தகத்தின் முன்பக்க நகல் ஆகிய ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலத்தை தொடர்பு கொள்ளலாம்.

நீடித்த நிலையான காய்கறி வருமானம் பெற நிரந்தர பந்தல் அமைப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# வேளாண்மை விரிவாக்க மைய இருப்பு கிடங்கில் வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு




அரியலூர், ஆக.18

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மைய இருப்பு கிடங்கு அரியலூர் வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனியால் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் போது வேளாண் இடு பொருட்களை உரிய நேரத்தில் பயனாளிகளுக்கு கிடைத்திடும் வகையில் வழங்கிடுமாறு அறிவுரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து மக்காச்சோள சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மக்காச்சோள விதைகள் வழங்கினார். மேலும் நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் ஆத்தூர் கிச்சலி சம்பா நெல் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரியலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஜென்சி மற்றும் வேளாண்மை அலுவலர் சிந்துஜா மேலும் வேளாண்மை உதவி அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# இயற்கை வேளாண்மை பயிற்சி!



சேலம், ஆக.18

40 விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், நாயக்கன்பட்டி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை இணை இயக்குனர் கு.சீனிவாசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெறுதல், பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுவது குறித்து எடுத்து கூறினர். விதை மற்றும் உயிர்ம சான்றளிப்புத்துறை உதவி இயக்குனர் அ.நவநீத கிருஷ்ணன் பேசுகையில், இயற்கை விவசாயம் செய்தல் மற்றும் உயிர்ம சான்று பெறும் வழிமுறைகள் குறித்தும் முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றும் பேசினார். இப்பயிற்சியின் நோக்கம் பற்றியும் உயிர்ம முன்னோடி விவசாயி பு.புஷ்பராஜா பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம், தேமோர் கரைசல், மீன் அமிலம் போன்ற, பயிருக்கு ஊட்டமளிக்கும் நுண்சத்துக்கள் தயாரிக்கும் முறைகள், தக்கை பூண்டு, சணப்பை போன்ற பசுந்தாள் உரப் பயிர்கள், பயிரிட்டு பூப்பதற்கு முன், அந்த நிலத்திலேயே உழவு செய்து உரமாக்குவது குறித்தும், வேளாண்மை அலுவலர் த.நிவேதா ஸ்ரீ வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் குறித்தும் எடுத்து கூறினார்.

இந்த பயிற்சியில் விதை சான்றளிப்பு அலுவலர்கள் கு.செல்வ குமார், பி.செந்தில்குமார், பி.அருண்குமார், வி.மணிமொழி மற்றும் பி.கௌரி சங்கர், துணை வேளாண்மை அலுவலர் (பெ) ப.மூர்த்தி, உதவி விதை அலுவலர் கே.ஆர்.தங்கராஜ், உதவி தோட்டக்கலை அலுவலர் நா.சதிஸ்குமார், உதவி வேளாண்மை அலுவலர் ம.தினேஷ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி,சரஸ்வதி, தீபன் முத்துசாமி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அட்மா திட்டத்தின் கீழ் நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை

சிவகங்கை, ஆக.18

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி வட்டாரம், கண்டியூர் புதுவயல் கிராமத்தில் வேளாண்மை துணை இயக்குனர் செல்வம், தலைமையில் நடைபெற்றது.

மேலும் இப்பயிற்சியில் அவர் கூறியதாவது,





நெல் சாகுபடியில் மண் பரிசோதனை அடிப்படையில் அங்கக உரங்கள், இரசாயன உரங்கள் மற்றும் உயிர் உரங்களை ஒருங்கிணைத்து பயன்படுத்துவது ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை எனப்படுகிறது. இதன் மூலம் பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை சரியான அளவில் வழங்குவதுடன், உரச்செலவையும் குறைக்க முடியும்.விவசாயிகள் முதலில் மண் பரிசோதனை செய்து, மண்வள அட்டையின் பரிந்துரைப்படி உரமிட வேண்டும் என கூறினார்.

இயற்கை முன்னோடி விவசாயி கருப்பு, மீன் அமிலம், தொழு உரம், பசுந்தாள் உரம், உயிர் உரங்கள் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்களைப் பயன்படுத்துவது மண் வளத்தை மேம்படுத்த உதவும் என கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் மனோஜ்குமார், வேளாண் இடுபொருட்கள் மற்றும் விவசாயிகளின் நில உடமைகள் பதிவேற்றம் பற்றி கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் நவநீதகிருஷ்ணன், நெற்பயிருக்கு தேவையான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்துக்களை பயிரின் வளர்ச்சிப் பருவத்திற்கு ஏற்ப வழங்க வேண்டும். இரசாயன உரங்களை ஒரே முறையில் அதிகமாக இடாமல், பரிந்துரைக்கப்பட்ட அளவில் பிரித்து மேலுரமாக இடுவதன் மூலம் ஊட்டச்சத்து பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கலாம் என கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சூர்யா, உர வீணாவதை குறைத்தல், உரச்செலவை குறைத்தல், மண் வளத்தை பாதுகாத்தல், ஊட்டச்சத்து பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையை கடைப்பிடித்து அதிக மகசூலும் அதிக வருமானமும் பெறலாம் என கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் சதீஷ்குமார் ஊட்டச்சத்து மேலாண்மை செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

# நானோ யூரியா பிளஸ் – ஒரு பார்வை

சென்னை, ஆக.18

இப்கோ நானோ யூரியா பிளஸ் (20% தழைச்சத்து) என்பது தாவரங்களுக்குத் தேவையான நைட்ரஜனை வழங்கும் திரவ உரமாகும். நுண்ணிய துகள்களைக் கொண்டிருப்பதால், தாவரங்கள் இதனை எளிதில் உட்கிரகித்து, சீரான வளர்ச்சியைப் பெறுகின்றன.

## நன்மைகள்

குருணை யூரியா பயன்பாட்டை குறைக்கிறது.

அதிக விளைச்சல் : பயிர்களின் வளர்ச்சி மற்றும் தரம் மேம்பட்டு, அதிகப்படியான பயிர் விளைச்சல் கிடைக்கிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு : கார்பன் மற்றும் நச்சு வெளியீடு குறைவு; நிலம் மற்றும் நீர் மாசுபாடு தவிர்க்கப்படுகிறது.

தாவர இலைகளில் எளிதில் பரவி, சத்துக்களை முழுமையாகப் பெற்றுத் தருகிறது. குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைக்க வழிவகுக்கிறது.




## பயன்படுத்தும் முறை

5 மி.லி. நானோ யூரியாவை ஒரு லிட்டர் நீரில் கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களான கிளைப்பு/தூர் விடும் தருவாயில் முதல் தெளிப்பாகவும், பூக்கும் பருவத்திற்கு முன் இரண்டாம் தெளிப்பாக பயன்படுத்தலாம்.

## தெளிப்பான் விவரம்

பேட்டரி தெளிப்பான் (15 –16 லிட்டர் டேங்க்) – ஒரு டேங்க்கிற்கு 50–70மி.லி நானோ யூரியா பிளஸ், ஒரு ஏக்கருக்கு 8–10 டேங்க் போதுமானது.

விதை தெளிப்பான் (20 –25 லிட்டர் டேங்க்) – ஒரு டேங்க்கிற்கு 75–100மி.லி நானோ யூரியா பிளஸ், ஒரு ஏக்கருக்கு 4–6 டேங்க் போதுமானது.

ட்ரோன் தெளிப்பான் (10 –12 லிட்டர் டேங்க்) – ஒரு டேங்க்கிற்கு 500மி.லி நானோ யூரியா பிளஸ், ஒரு ஏக்கருக்கு 1 டேங்க் போதுமானது

# கால்நடை வளர்ப்பில் மேலாண்மை முறைகள் மற்றும் தீவன பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் பயிற்சி




கடலூர், ஆக.18

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில், 18.08.26 அன்று கால்நடை வளர்ப்பில் மேலாண்மை முறைகள் மற்றும் தீவன பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து வாழ்த்துறை வழங்கினார். முனைவர் ந.வெங்கடபதி பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை பல்கலைக்கழகம், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கடலூர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு கால்நடை பற்றிய அனைத்து விவரங்களும் எடுத்துத் துரைத்தார்.

மேலும் மாட்டு இனங்கள், மாடுகளை தேர்ந்தெடுத்தல், கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை, கன்று மற்றும் கிடாரி மேலாண்மை, இனப்பெருக்க மேலாண்மை, தூய்மை பால் உற்பத்தி மற்றும் மதிப்புகூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்தல், மற்றும் கோழி வளர்ப்பு மற்றும் இரகங்கள் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக விளக்கினார்.

மேலும் செயல்விளக்கமாகவும் விவசாயிகளுக்கு விளக்கப் பட்டது. இப்பயிற்சியில் முனைவர் சத்தியநாரயணன் (விதை நுட்பவியியல் துறை), முனைவர் கூ.சுஜெய்வேலு, முனைவர். கமலகண்ணன் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்ததை சேர்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த விவசாயிகள் பயிற்சி




சிவகங்கை, ஆக.18

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரம், ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் 12.08.2026 அன்று வேளாண்மைத்துறையின் சார்பில் அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் (ஓய்வு) குணசேகரன், ஒரே பண்ணையில் பயிர் சாகுபடி, கால்நடை, கோழி, மீன், காய்கறி ,பழப்பயிர் போன்ற பல்வேறு வேளாண் தொழில்களை ஒருங்கிணைத்து ஒன்றின் கழிவுகளை மற்றொன்றிற்கு பயன் படுத்தி கூடுதல் வருமானம் மற்றும் நிலையான உற்பத்தி பெறும் முறையே ஒருங்கிணைந்த பண்ணையம் என்பது பற்றிய தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார்.

துணை வேளாண்மை அலுவலர் சுரேஷ், துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். உதவி விதை அலுவலர் தங்கையா, விதை பண்ணை அமைப்பது குறித்து எடுத்துக் கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சத்யா, அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் நந்தினி மற்றும் சண்முகப்பிரியா பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சிறுதானிய பயிரில் விதைப்பண்ணை அமைத்து தரமான விதைகளை உற்பத்தி செய்து வேளாண் துறைக்கு வழங்கினால் கூடுதல் இலாபம் பெறலாம்

சோளம் , கம்பு, கேழ்வரகு, திணை, சாமை, வரகு, பனிவரகு, குதிரைவாலி ஆகியவை சிறுதானிய பயிர்கள் ஆகும். இந்த பயிர்கள் பயிர் சுழற்சி முறைக்கு உகந்தாகவும் வறட்சி, களர், உவர் மற்றும் வளமற்ற நிலப்பகுதியிகளில் சாகுபடி செய்ய ஏற்றதாகவும் உள்ளது.

சிறுதானியங்களில் மிகுதியான தாதுப்பொருட்கள், உயிர்சத்துக்கள், நார்ச்சத்துக்கள் மற்றும் குறைந்த அளவு கொழுப்புச்சத்துக்கள் அடங்கி இருக்கிறது. மற்ற தானியங்களை காட்டிலும், சிறுதானியங்களில் கால்சியம் மற்றும் இரும்பு சத்துக்கள் அதிக அளவில் உள்ளது. சிறுதானியங்கள் பூச்சி மருந்து பயன்பாடும் குறைவு ஆகும். சிறுதானிய பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க தரமான விதைகளை பயன்படுத்துவது அவசியம்.

## தரமான விதை

சிறுதானிய பயிரின் விளைச்சலுக்கு தரமான விதையே மூலதனம். தரமான விதை என்பது பாரம்பரிய குணங்களில் சிறிதும் குறையாமலும், பிற ரகம் மற்றும் பிற பயிர்கள் கலப்பு இல்லாமல் தூசி தும்பு இல்லாமல் பூச்சி பூஞ்சானம் தாக்காமல் அதிக முளைப்பு திறனுடன் இருக்கும். விதையே தரமான விதை ஆகும். தரமான விதைகளை பயன்படுத்துவதால் அதிகப் படியான முளைப்புத்திறன், சரியான பயிர் எண்ணிக்கை, சீரான பயிர் வளர்ச்சி, ஒரே நேரத்தில் பூத்து முதிரும் பயிர், அதிக மகசூல் போன்ற நன்மைகளை பெற முடியும்.

சிறுதானிய விதைகளை விதைப்பு செய்த 35 நாட்களுக்கு அல்லது பூப்பதற்கு 15 நாட்கள் முன்னதாகவே இராமநாதபுரம் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதைப்பு அறிக்கை (Sowing Report) 3 நகல்களில் உரிய படிவத்தில் பதிவு செய்யப்படவேண்டும். விதைப்பு அறிக்கை படிவத்தின் பின்புறம் வயலின் வரைபடம் இருக்க வேண்டும். இத்துடன் விதைகளுக்கான சான்றட்டைகள் விதை வாங்கிய விற்பனை ரசீது இணைக்கப்பட வேண்டும்.

ஒரு விதைப்பு அறிக்கையில் அதிகபட்சமாக 25 ஏக்கர் வரை பதிவு செய்யலாம். விதைப்பண்ணையின் இருவேறு பகுதிகள் 50 மீட்டருக்கு மேல் இருந்தாலோ, விதைப்பு நாள் 7 நாட்களுக்கு மேல் வித்தியாசப்பட்டாலோ, தனித்தனி விதைப்பு அறிக்கைகளில் பதிவு செய்ய வேண்டும்.

விதைப்பு அறிக்கை (sowing report) 1. விதைக்குரிய சான்றட்டை (ஆதாரம் (அ) சான்று) 2. விதை வாங்கிய பில் (அதில் சான்றட்டை எண்கள் குறிக்கப்பட வேண்டும்) 3. நிலத்தின் வரைபடம். 4. பதிவு கட்டணம் 1 ஏக்கர் சிறுதானிய விதைப் பண்ணைக்கு பதிவுக் கட்டணம் - ரூ.25 வயலாய்வுக் கட்டணம்- ரூ.100 விதைப் பரிசோதனை கட்டணம் - ரூ. 80 ஆக மொத்தம்-ரூ.205/-ஐ கட்டணமாக செலுத்த வேண்டும். சிறுதானியங் களை பயிரிடும் பெரும்பாலான விவசாயிகள் இயற்கை மற்றும் நுண்ணுயிர் உரங்களையே பயன் படுத்துகின்றனர்.

சிறுதானியப் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மிகக் குறைவாக உள்ளது. இதனால் இவ்வகைப் பயிர்களுக்கு எந்த விதமான பூச்சிகொல்லிகளை பயன்படுத்த தேவையில்லை. சுற்றுச் சூழலும் பாதிக்கப்படுவதில்லை. குறைந்த அளவு தண்ணீர் உள்ள பகுதி மற்றும் மானாவாரி பயிர்களாக சிறுதானியங்களை பயிரிடலாம். மேலும் இதனை தீவனப்பயிர்களாகவும் பயிரிடலாம்.

## முளைப்புத் திறன்

சிறுதானிய பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு, குதிரை வாலி போன்றவற்றிற்கு 75 சதவீத விதை முளைப்புத்திறன் இருக்க வேண்டும். மேலும் விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள விதைகளை விதைக்கும் போது அந்த விதைகள் சரியான முளைப்புத்திறன் உடையவைதானா என பரிசோதித்து விதைக்க வேண்டும்.

விதை உற்பத்திக்கு ஏற்ற சாகுபடி தொழில்நுட்பங்களை திறம்பட பயன்படுத்த வேண்டும். ரகத்தின் மரபுத்தூய்மையை பராமரிக்க போதுமான பயிர் விலகல் தூரத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொரு ரகத்தின் மரபுத்தூய்மையை உறுதிப் படுத்த அவ்வப்போது கலவன் அகற்ற வேண்டும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

நிலம் தேர்வு, விதைக்கும் பருவம், பயிரின் வளர்ச்சி, பூக்கும் பருவம் மற்றும் அறுவடைக்கு முந்தைய நிலைகளில் பயிர்களை கண்காணித்தல். சிறுதானிய பயிர்களின் விதைகள் சிறிய அளவில் இருப்பதால் கல் மண் மற்றும் தூசிகளை கவனமாக அகற்றுதல், சுத்தம் செய்த விதைகளை விதை நேர்த்தி செய்து முறையாக சேமித்து வைக்க வேண்டும். இவ்வாறு சிறுதானிய பயிரில் விதைப்பண்ணை அமைத்து தரமான விதைகளை உற்பத்தி செய்து வேளாண் துறைக்கு வழங்கினால் கூடுதல் லாபம் பெறலாம் என ராமநாதபுரம் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பொ.இரத்தினகுமார் தெரிவித்துள்ளார்.



# நடப்பு சம்பா பருவத்திற்கு நெல் விதைகள் தயார்

அரியலூர், ஆக.18

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் அரியலூர், வேளாண்மை இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி, ஆய்வு மேற்கொண்டார். ஜெயங்கொண்டம் வட்டாரம் தேவமங்கலம் கிராமத்தில் நெல் ADT-59 இரக விதைப்பண்ணையினை ஆய்வு செய்து அறிவுரை வழங்கினார். நடப்பு சம்பா பருவத்திற்குரிய நெல் இரகங்களான ADT-51, ADT-54 மற்றும் CR 1009 Sub-1 ஆகிய இரகங்களை மீன்சுருட்டி மற்றும் ஜெயங்கொண்டம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானிய விலையில் விவசாயிகளுக்கு விரைந்து வழங்கிட தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்தார். மேலும் ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் இயங்கி வரும் திரவ உயிர் உர உற்பத்தி மையத்தில் வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு மேற்கொண்டு எந்தெந்த உயிர் உரங்கள் இருப்பில் உள்ளன அதன் தரம் மற்றும் அலுவலக பராமரிப்பு திரவ உயிர் உரம் தயாரிக்கும் இயந்திரங்கள் பற்றிய நிலை குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும் ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் உள்ள வருவாய் கிராமங்கில் உள்ள அனைத்து விவசாய நிலங்களுக்கும் மின்னனு பயிர் கணக்கெடுப்பு (Digital Crop Survey) செய்து முடித்திடவும் மற்றும் விவசாயிகள் நில உடைமை பதிவு (Farmer Registration) ஆகியவை விரைந்து முடித்திடவும் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். இந்த ஆய்வில் வேளாண்மை அலுவலர் மா.மகேந்திரவர்மன், வேளாண்மை அலுவலர் (LAB) செல்வகுமார், உதவி விதை அலுவலர் மணிகண்டன் மற்றும் வேளாண் உதவி அலுவலர் பாலாஜி ஆகியோர் உடனிருந்தனர்.



# உட்புற தோட்டக்கலை (Indoor gardening)

## பற்றி விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி



கிருஷ்ணகிரி, ஆக.18

கிருஷ்ணகிரி வட்டாரம், வேளாண்மைத்துறை அட்மா திட்டத்தின் கீழ் உள் மாவட்ட அளவிலான 2026-27-ம் ஆண்டிற்கான பெல்லாரம்பள்ளி கிராமத்தில் வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் 'உட்புற தோட்டக்கலை முறைகள்' (Indoor gardening) விவசாயிகளுக்கு பயிற்சி நடத்தப்பட்டது.

இப்பயிற்சிக்கு மு.புனிதவள்ளி, வேளாண்மை உதவி இயக்குநர், கிருஷ்ணகிரி, தலைமை தாங்கினார். மேலும் இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் மற்றும் இடுபொருட்கள், அதன் பயன்கள் குறித்து விளக்கம் அளித்தார். வேளாண்மை துறையில் தற்போது செயல்படுத்தப்படும் பயறுவகை மற்றும் சிறுதானியங்களுக்கான மானியம் மற்றும் சொட்டு நீர் பாசனம் அமைத்தல், துணை நீர் மேலாண்மை திட்ட மானியங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலையம் எழுமிச்சங்கிரி, மு.குணசேகரன், Soli Science, ICAR, KVK, கிருஷ்ணகிரி, மாடிதோட்டம் மற்றும் வீட்டுதோட்டம் அமைக்கும் முறைகள் அவற்றின் பயன்கள், இயற்கை முறையில் காய்கறி பயிர்கள் தாயரிக்கும் முறைகள் அவற்றின் முக்கியதுவம் குறித்தும், காய்கறி பயிரிகளில் பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் பூச்சி நோய் தாக்குதலை கட்டுபடுத்தும் முறைகள், மண் மாதிரி எடுத்தல் அவற்றின் பயன்களையும், முக்கிய துவத்தையும் பற்றி விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். பார்த்திபன், வட்டார தொழில்நுட்ப மேலாளர், கிருஷ்ணகிரி, வேளாண்மைத் துறையின் திட்ட செயல்பாடுகள் இடுபொருட்கள் மானிய விலையில் பெறுதல் பற்றியும் அட்மா திட்டம் குறித்தும், செயல்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். மா.பார்வதி, அருள்மொழி, இப்பயிற்சிக்கான முன்னேற்ப்பாட்டு பணிகள் செய்திருந்தினர். அட்மா திட்ட உழவன் நன்பன் பைரப்பன், நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சியில் 40-க்கும் மேற்ப்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 CML-6400119810 | IS 9537 CML-6400121694

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW | isha | POWERGRID | BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**